**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No.164/2025**
**Prosecution Witness**:PW1

| Name | தமிழ்செல்வன் (PW1) | Caste | |
|---|---|---|---|
| Father's Name | நாகராஜ் | Calling | |
| Village | மாக்கினாம்பட்டி | Religion | |
| Taluk | பொள்ளாச்சி | Age | |
| District | கோவை மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of March 2026** by K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused are present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

1. நான் தற்போது பெருமாநல்லூர், தட்டான்குட்டையில் குடியிருந்து கொண்டு வெல்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 8 வருடங்களுக்கு முன்பு என் அக்கா மகள் சத்யா தேவி என்பவருக்கும், புகேழந்தி என்பவருக்கும் திருமணம் நடைபெற்று கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து அவிநாசி சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு நடைபெற்று வந்த நிலையில் கடந்த 12.09.2024 ம் தேதி மாலை சுமார் 06.50 மணிக்கு ஆஜர் எதிரிகளாகிய புகேழந்தி மற்றும் கார்த்தி ஆகியோர்கள் வழக்கு சம்பந்தமாக பேசி தகராறு ஏற்பட்டு விட்டது. இது சம்பந்தமாக பெருமாநல்லூர் காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தேன். அந்த புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் என்னுடையது தான். அந்த புகாரில் உள்ள கையொப்பம் (அ.சா.ஆ.1) ஆக குறியீடு செய்யப்படுகிறது. நாங்கள் உறவினர்கள் என்பதால் தற்போது சமாதானமாக சென்று விட்டோம். இந்த வழக்கினை மேற்கொண்டு நடத்த விருப்பம் இல்லை.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பு) :-**

நான் புகாரில் கையொப்பம் மட்டும் செய்தேன். புகாரினை போலீசார் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். உங்களுக்கு ஏற்பட்ட காயங்கள் கூட்டத்தில் கால்

இடறி கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயம் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். தற்போது இருதரப்பும் சமாதானமாக சென்று விட்டோம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:– இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |